# அரசியல் சாசனத்தில் மண்வாசனை!

விடுதலைப் பெற்று 50 ஆண்டுகளில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஏற்பட்ட நிறை, குறைகளை அறிய ஒரு குழு அமைக்கப்படும்; நாட்டின் பல்வேறு சவால்களைச் சந்திக்கக் கூடிய வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்யப்படும் என பா.ஜ.க. கூட்டணிக் கட்சிகளின் தேசிய செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடிய நடவடிக்கையாகும்.

அரசியல் சட்டத்தில் சூழ்நிலைக்கேற்றவாறு திருத்தம் தேவை என முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி, என்.டி.இராமாராவ், பி.கே.நேரு மற்றும் பல்வேறு அறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்கள், நாம் சந்தித்த பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்து பரிசீலனை செய்து புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக் கொள்ள வேண்டிய காலம் வந்துள்ளது என குடியரசுத் தலைவராக இருந்தபொழுது நீலம் சஞ்சீவ ரெட்டி தமது சுதந்திர நாள் செய்தி ஒன்றில் தெளிவுபடுத்தினார்.

அரசியல் சட்டத்தை வடிவமைத்த டாக்டர் அம்பேத்கர் மக்களுடைய பிரச்சினைகளுக்கு ஏற்ப திருத்தங்கள் செய்யலாம் என்று கூறினார். அரசியல் சட்டத்தைத் திருத்த முடியாது எனப் பழைமைவாதம் பேசுவது அர்த்தமற்றது எனக் கூறியுள்ளார் நீதிபதி கிருஷ்ணய்யர். இன்றுள்ள இந்தியாவின் நிலைக்கு ஏற்றவாறு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அல்லது தற்போதைய சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவது தேவையான, தலையாய பணியாக இருக்கிறது.

ஊழல், நிலையற்ற ஆட்சி, பொருளாதாரச் சீர்குலைவு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கின்ற வகையில் நாட்டின் அரசமைப்புப் பணிகள் இருக்க வேண்டும். அரசில் என்ன நடைபெறுகிறது என்பதை ஒளிவுமறைவின்றி மக்கள் தெரிந்து கொள்வதை அடிப்படை உரிமையாக்க வேண்டும். மக்களவை, சட்டமன்றத் தொகுதிகளை பல ஆண்டுகளாகியும் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு பிரித்து நிர்ணயம் செய்யப்படவில்லை. தேர்தல் தில்லுமுல்லுகளுக்கு தீர்வு கண்டால்தான் நாம் செல்கின்ற பாதை சரியாக இருக்கும்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பற்ற நிலை, விலைவாசி ஏற்றம், அரசு நலப் பணிகளில் மெத்தனம், பல்வேறு தேசிய இனப் பிரச்சினைகள், தீவிரவாதம் போன்ற சிக்கல்களை இன்றைக்கு இந்தியா எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில் தற்சமயம் விவாதிக்கப்பட்டு வரும் 'தேசிய அரசு' போன்று இந்தியாவிற்கு அதிபர் ஆட்சி முறை வேண்டுமா? அல்லது இன்றைய நாடாளுமன்ற ஆட்சி முறையே நீடிக்கலாமா? என்று இந்தியாவின் அடிப்படை அமைப்புகளைப் பற்றி தினமும் விவாதங்கள் நடந்து

வருகின்றன. இதற்கு விடை அளிக்கும் வகையில், இந்திய அரசியல் சாசனம் அமைய வேண்டும்.

இந்தியா கூட்டாட்சி அமைப்பா அல்லது கூட்டாட்சி கலந்த ஒற்றையாட்சி அமைப்பா என்பதைத் தெளிவாக அரசியல் சாசனத்தில் தெரிவிக்க வேண்டும். இந்திய அரசியல் சாசனம் நெகிழாத தன்மை கொண்டதா அல்லது நெகிழும் தன்மையுடையதா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். அரசின் வழிகாட்டிக் கொள்கைகளை நீதிமன்றம் மூலம் எவ்வாறு நெறிப்படுத்தலாம் என்பதையும் அரசியல் சாசனம் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. மத்திய - மாநில உறவுகளைப் பற்றியும் மாநிலங்களுக்கு இடையே உள்ள நதி நீர்ச் சிக்கல்களை விரைவில் தீர்க்கவும் அரசியல் சட்டம் ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும். மத்திய - மாநில உறவுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட நீதிபதி சர்க்காரிய குழு, நீதிபதி ராஜமன்னார் குழு போன்ற குழுக்களின் பரிந்துரைகள் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

அரசியல் சட்ட 356 - ஆவது பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசுகளைக் கலைப்பது குறித்தும் ஆரோக்கியமான விவாதம் தேவை. நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்யவும், பிரதம அமைச்சரைக் கூட நீக்கவும், நாடாளுமன்றத்தைக் கலைக்கவும் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் இருந்தாலும் அவர் ஒரு சம்பிரதாயத் தலைவராகவே இருக்கிறார். பிரதம அமைச்சருக்கும், இந்தியக் குடியரசுத் தலைவருக்கும் உள்ள உறவை அரசியல் சாசனம் தெளிவுபடுத்தவில்லை. இதனால் பண்டித நேருவுக்கும், இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான இராஜேந்திர பிரசாத்துக்கும் பல சமயங்களில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்திற்கும் சில சமயங்களில் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன. திட்டக் கமிஷன் மற்றும் நிதிக் கமிஷன் பற்றிய பணிகள் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

சிறையில் இருந்துகொண்டு ஜார்ஜ் பெர்னாண்டஸ், சிம்ரஞ்சித் சிங் மான் ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் சிறையில் உள்ளவர்கள் தேர்தலில் வாக்களிக்க இந்தியாவில் வாய்ப்பு இல்லை. சிறுபான்மையினர் நலன் வெறும் எழுத்துக்களில் இல்லாமல் திட்டங்களில் வரவேண்டும். உண்மையான மதச்சார்பின்மை நாட்டில் நிலவி, அனைத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ வழி வகுக்க வேண்டும்.

இன்றைக்கு இருக்கின்ற நமது அரசியல் சாசனத்தில் பல தெளிவின்மைகள் இருக்கின்றன. ஒரு நாட்டின் ஜீவநாடியாக உள்ள அரசியல் சாசனம், நாட்டை நடத்திச் செல்லும் வழிகாட்டியாக விளங்க வேண்டும். 1946 - இல் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள், இந்தியாவின் அனைத்துத் தரப்பு மக்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு, வயது வந்தவர்கள் அனைவரும் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட மேல்தட்டு, கல்வி கற்றோர் என்ற அடிப்படையில், அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே, இன்றைக்கு உள்ள இந்திய அரசியல் சட்டம் என்பது நாட்டின் அனைத்து மக்களின் பிரதிபலிப்பல்ல.

50 ஆண்டிற்குள்ளேயே 82- க்கும் மேற்பட்ட திருத்தங்கள் கொண்டு வரவேண்டிய காரணமே, இந்திய அரசியல் சட்டத்தில் சில தெளிவின்மைகள் இருப்பதால்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமெரிக்க அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு Qmhzumh 210 ஆண்டுகள் ஆயினும், (1971 - ஆம் ஆண்டு வரை) 26 சட்டத் திருத்தங்களே அதில் செய்யப்பட்டுள்ளன.

உலக அளவில் பார்த்தால் இந்திய அரசியல் சாசனம்தான் அதிகமான பிரிவுகளும், பக்கங்களும் அடங்கிய அரசியல் சாசனமாகும். இந்திய அரசியல் சாசனம் இங்கிலாந்தில் உள்ள அரசியல் மரபுகளையும், அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளின் அரசியல் சாசன பிரிவுகளையும் பின்பற்றி உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு அரசியல் சாசனமும் ஒரு புரட்சி அல்லது போராட்டம் ஆகியவற்றிற்குப் பிறகுதான் உருவாக்கப்படுகிறது. இந்திய அரசியல் சாசனம் விடுதலைப் போராட்ட உணர்வுகளால் 'பன்மையில் ஒருமை' என்ற தத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், பல்வேறு மொழிகள், இனங்கள், கலாசாரங்கள் ஆகியவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக கட்டுக்கோப்பாகச் சேர்த்து வைக்கின்ற கருவியாக அரசியல் சாசனம் இருக்கவில்லை.

மாநில அரசு மீது மாற்றாந்தாய் மனப்போக்கோ, சட்டாம்பிள்ளைத்தனமோ இல்லாதவாறு மத்திய அரசின் அணுகுமுறை இருக்க அரசியல் சாசனம் உறுதி செய்ய வேண்டும். சமுதாய ஏற்றத் தாழ்வு இல்லாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் அது அமைய வேண்டும். இந்தியாவினுடைய பிரச்சினைகள், கலாசாரம் மற்றும் மக்களின் தேவைகளை மனத்தில் கொண்டு மண்வாசனைகளையும் பிரதிபலிக்குமாறு நமது அரசியல் சாசனம் அமைய வேண்டும். நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அது இருக்க வேண்டும்.

'மற்ற நாடுகளின் அரசியல் சாசனப் பிரிவுகளை நாம் பயன்படுத்துவதைவிட, நமது கலாசாரம், நமது தேவைகளை அறிந்து நாம் நமது அரசியல் சாசனத்தை வகுக்க வேண்டும்' என நாடாளுமன்ற முன்னாள் செயலர் சுபாஷ் கஷ்யப் கூறுகிறார். 'அரசியல் சட்டம் மனித குலம் வளம் பெறுவதற்காக உருவாக்கப்படுவதாகும். அது அரசமைப்புக்கு மட்டுமே உருவாக்கப்படுவதல்ல' என்று ஒருசமயம் அரசியல் அறிஞர் பி.கே.நேரு கூறினார். இதைவிட எளிமையாக எப்படிச் சொல்ல முடியும்?

தினமணி, 17.04.1998